நாள்: 23.09.2025

# பன்னாட்டு மொழிபெயர்ப்பு நாள் 2025 கருத்தரங்கம்

# Seminar on International Translation Day 2025

**(29.09.2025)**

## அறிவிப்பும் அழைப்பும்

மொழிபெயர்ப்பு என்பது சொற்களை மாற்றியமைப்பதாக மட்டுமல்லாமல் மனித அனுபவங்களையும் கருத்துகளையும் பரிமாறிக்கொள்ள உதவும் பண்பாட்டுப் பாலமாகத் திகழ்கிறது. எனவேதான் உலகம் முழுவதும் உள்ள மொழிகள், பண்பாடுகள் ஆகியவற்றுக்கு இடையேயுள்ள தொடர்பை ஊக்குவிக்கவும் மொழிபெயர்ப்பாளர்களின் பங்களிப்பினைப் பாராட்டவும் ஆண்டுதோறும் செப்டம்பர் 30ஆம் நாள் பன்னாட்டு மொழிபெயர்ப்பு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. “மொழிபெயர்ப்பானது நீங்கள் நம்பக்கூடிய எதிர்காலத்தை வடிவமைக்கிறது” (Translation, shaping a future you can trust) என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு இவ்வாண்டு பன்னாட்டு மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 29.09.2025 அன்று பன்னாட்டு மொழிபெயர்ப்பு நாள் விழாக் கருத்தரங்கம் ஒன்றை நடத்துகிறது. இக்கருத்தரங்கில் சமஸ்கிருதம், இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மொழிபெயர்ப்பு அறிஞர்கள் மொழிபெயர்ப்பின் சிறப்புக் குறித்து உரையாற்ற உள்ளனர். கல்வி நிறுவனங்கள்/பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளில் தமிழ், சமஸ்கிருதம், இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் ஆகிய துறைகளைச் சார்ந்த ஆய்வு மாணவர்களை இக்கருத்தரங்கில் பங்கேற்குமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**கருத்தரங்க விதிமுறைகள்:**

- கருத்தரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - 50
- இக்கருத்தரங்கம் **29.09.2025** அன்று **காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை** நடைபெறும்.
- **சென்னை, காஞ்சிபுரம். திருவள்ளூர், செங்கல்பட்டு** ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த ஆய்வு மாணவர்கள் மட்டுமே இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம்.
- பங்கேற்பாளர்கள் தங்கள் வருகையை https://forms.gle/GGrExP7zKFGYnMoP8 என்னும் இணைப்பிலோ பின்வரும் விரைவுக் குறியீடு (QR Code) மூலமாகவோ விண்ணப்பிக்கவேண்டும்.

- பகலுணவும் இருவேளைத் தேநீரும் வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு அரசு விதிமுறையின்படி பயணப் படி வழங்கப்படும்.
- பங்கேற்கும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
- இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பிக்க இறுதிநாள்: **26.09.2025**
- கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **27.09.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

**இயக்குநர்**